**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8051848

1. District மாவட்டம் : Madurai   PS: காவல்நிலையம் V & AC   Year: ஆண்டு 2021   FIR No.: மு.த.அ. எண் 18/21   Date: நாள் 26.12.2021

2. (i) Act சட்டம்: PC Act 1988   Sections பிரிவுகள்: u/s 7 of Prevention
   (ii) Act சட்டம்:   Sections பிரிவுகள்: of Corruption Act
   (iii) Act சட்டம்:   Sections பிரிவுகள்: 1988 as amended
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : by the PC (Amendment) Act 2018

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்   Date from : நாள் முதல்   Date to : நாள் வரை (1) 21.12.2021 at about 18:00 hrs.
   Time Period : நேர அளவு   Time from : நேரம் முதல்   Time to நேரம் வரை (2) 23.12.2021 at about 11:00 hrs. (3) 23.12.2021 at about 16:15 hrs ~~18:00 hrs.~~
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 26.12.2021   Time நேரம் :
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 26.12.2021   Time நேரம் : 17:00 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக   எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்   சுமார் 40 km மேற்கே
   Beat Number : முறைக் காவல் எண்   (b) Address : முகவரி   சர்வேயர் அலுவலகம், மேற்கு மெயின் ரோடு, உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்   District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்   M. ரஞ்சித்குமார்   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்   மாயாண்டி
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு   11.03.1994   (d) Nationality : நாட்டினம்   இந்தியன்   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் கட்டிட தொழில்   (g) Address : முகவரி   1/138, தெற்கு தெரு, பூச்சிபட்டி, எத்திலப்பட்டி கிராமம், உசிலம்பட்டி தாலுகா, மதுரை மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. கா. [illegible], சர்வேயர், சர்வேயர் அலுவலகம், மேற்கு மெயின் ரோடு, உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 26/12/2021

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

[signature]

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
26.12.2021 at 18:15 hrs.

Name: பெயர் P. T. RAJESH PRABHU
Rank: நிலை Inspector of Police No. எண் ........
Vigilance & Anticorruption
Madurai detachment.
26.12.2021.

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,</u>

இன்று 26.12.2021-ஆம் தேதி மாலை 16.15 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியிலிருந்த போது, மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலுகா, நக்கலப்பட்டி கிராமம், பூச்சிப்பட்டி, தெற்குதெரு, கதவு எண். 1/138 என்ற முகவரியில் வசிக்கும் M.ரஞ்சித்குமார் த/பெ. மாயாண்டி என்பவர் ஆஜராகி எழுத்துபூர்வமான புகார் மனுவை கொடுத்தார். அந்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு : அனுப்புநர்: M.ரஞ்சித்குமார், த/பெ மாயாண்டி, 1/138, தெற்கு தெரு, பூச்சிபட்டி, நக்கலப்பட்டி கிராமம், உசிலம்பட்டி தாலுகா, மதுரை மாவட்டம். பெறுநர்: காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு துறை அலுவலகம், மதுரை. அய்யா, நான் பூச்சிபட்டி கிராமத்தில் எனது மனைவி, எங்களது குழந்தை எனது தாய் மற்றும் அப்பத்தாவுடன் வசித்து வருகிறேன். நான் உசிலம்பட்டியில் ஆட்டோ ஒட்டி பிழைப்பு நடத்தி வருகிறேன். எனது அப்பா மாயாண்டி கடந்த 19.08.2013ம் தேதியன்று நக்கலப்பட்டி கிராம புஞ்சை சர்வே எண் 179/4B-யில் 5 செண்டு காலி வீட்டடி இடத்தை ஒச்சம்மாள் வகையறாவிடமிருந்து ரூ.1,52,950/-க்கு விலைக்கு வாங்கி அதனை உசிலம்பட்டி பத்திர ஆபிசில் பத்திர எண் 3059/2013ன்படி கிரையம் பெற்றார். பின்பு எனது அப்பா மாயாண்டி கடந்த 08.12.2018ம் தேதி காலமாகிவிட்டார். அந்த இடத்தை எனது அம்மா திருமதி.ஜெயலட்சுமி மற்றும் எனது அப்பத்தா திருமதி.மயிலம்மாள் ஆகியோர்கள் எனது பெயரில் கடந்த 18.11.2021ம் தேதியன்று தானசெட்டில்மெண்ட் பத்திர எண் 4884/2021ன்படி உசிலம்பட்டி பத்திர ஆபிசில் எழுதி கொடுத்தார்கள். பின்னர் கடந்த 09.12.2021ம் தேதி சாயங்காலம் 4.50 மணியளவில் 9894341283 என்ற எண்ணில் இருந்து எனது செல்போன் எண் 9087823981-க்கு தொடர்பு கொண்டு தான் உசிலம்பட்டி சர்வேயர் அலுவலகத்தில் இருந்து செந்தில்குமார் பேசுவதாகவும், எனது பெயரில் பட்டா மாறுதலுக்கு பத்திர அலுவலகத்திலிருந்து வந்திருப்பதாகவும், அதற்காக பதிவு செய்த இடத்திற்கான பத்திரத்தை நகல் எடுத்து கொண்டு வரும்படி சர்வேயர் திருமதி.காஞ்சனா கூறியதாக சொன்னார். எனது அப்பத்தாவிற்கு உடல்நிலை சரியில்லாததால் நான் எனது பத்திர நகலை உடனே கொண்டு போய் அவரிடம் கொடுக்க முடியவில்லை. எனவே மீண்டும் 15.12.2021ம் தேதி சாயங்காலம் 06.00 மணியளவில் செந்தில்குமார் செல்போன் மூலம் என்னை தொடர்பு கொண்டு பத்திர நகலை இதுவரை ஏன் கொடுக்கவில்லை என என்னிடம் கேட்டு பத்திர நகலை உடனே கொடுக்கும்படி சர்வேயர் கேட்டதாகச் சொன்னார். பின்னர் 16.12.2021ம் தேதி மத்தியானம் 12.15

மணியளவில் நான் செந்தில்குமார் அவர்களை எனது செல்போனில் இருந்து தொடர்பு கொண்டு இப்ப பத்திரத்தின் நகலை கொண்டு வரலாமா என கேட்டேன். அதற்கு அவர் சாயங்காலம் கொண்டு வா என்று கூறியதால் நான் அவரிடம் அன்று சாயங்காலம் உசிலம்பட்டி சர்வேயர் ஆபிசில் வைத்து எனது பெயரில் பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் நகலை கொடுத்தேன். அதனை பெற்றுக்கொண்ட அவர், சர்வேயரிடம் கொடுத்துவிடுவதாக சொன்னார். பின்னர் 17.12.2021ம் தேதி மதியம் 03.15 மணியளவில் மற்றும் சாயங்காலம் 5.00 மணியளவில் செந்தில்குமார் என்னை செல்போனில் 2 தடவை தொடர்பு கொண்டு எனது இடத்தை அளக்க சர்வேயர் மேடம் வருவதாக சொன்னார். ஆனால் அன்று வரவில்லை. பின்னர் மீண்டும் 21.12.2021ம் தேதி சாயங்காலம் 4.50 மணியளவில் செந்தில்குமார் என்னை செல்போன் மூலம் தொடர்பு கொண்டு எனது இடத்தை அளக்க சர்வேயர் திருமதி.காஞ்சனா வருவதாக சொன்னார். பின்னர் சுமார் அரைமணி நேரத்தில் எனது இடத்திற்கு சர்வேயர் காஞ்சனா, செந்தில்குமாருடன் வந்து எனது இடத்தை அளந்து முடித்துவிட்டார். பின்னர், சர்வேயர் காஞ்சனா அவர்கள் என்னிடம் ரூ.6,000/- கொடுங்கள் உங்களுக்கு பட்டா உடனே கிடைக்க ஏற்பாடு செய்கிறேன் என்றார். அப்போது நான் அவரிடம் இது என்ன அரசாங்கத்திற்கு கட்ட வேண்டிய பணமா என்று கேட்டேன். அதற்கு அவர் இல்லை நான் உங்களுக்கு பட்டா கிடைக்க ஏற்பாடு செய்வதற்காக தனக்கான செலவு என்றார். அதற்கு நான் என்னிடம் இப்போதைக்கு அவ்வளவு பணம் இல்லை என்று கூறினேன். அதற்கு அவர் என்னிடம் எனது அப்பா பெயரில் 2013ம் வருடம் பதிவு செய்த கிரைய பத்திரத்தின் நகலுடன் அவர் செலவுக்கு என்று கேட்ட பணம் ரூ.6,000/-த்தயைும் சேர்த்து மறுநாள் கொண்டு வந்து அவரிடம் கொடுக்கும்படி சொன்னார். ஆனால் நான் பணம் புரட்ட முயன்றும் முடியவில்லை, அதனால் மறுநாள் அவர் கூறியபடி நான் போகவில்லை. அதனால் 22.12.2021ம் தேதியன்று செந்தில்குமார் என்னை சாயங்காலம் 4.00 மணியளவில் செல்போன் மூலம் தொடர்பு கொண்டு மேடம் வரச்சொல்கிறார் என்றார். அதன் பின் 23.12.2021ம் தேதி காலை 10.00 மணியளவில் என் செல்போனில் செந்தில்குமார் தொடர்பு கொண்டு மேடம் வரச்சொன்னார் எனக் கூறினார். நான் அவரிடம் சரி வருகிறேன் என்றேன். பின்னர் அன்றையதினமே மீண்டும் செந்தில்குமார் அவர்கள் காலை 11.00 மணியளவில் என்னை செல்போனில் தொடர்பு கொண்டு சர்வேயர் மேடம் பேசுறாங்க என்று சொல்லி நீ பேசுப்பா என்றார், அப்போது சர்வேயர் மேடம் என்னிடம் பணம் என்னாச்சு என்றும் இன்னிக்கு சாயங்காலம் 6.00 மணிக்குள் பணத்தை

கொடுத்தால் பட்டா உடனே கிடைத்துவிடும் இல்லாவிட்டால் தாசில்தார் கிறிஸ்துமஸ் லீவில் போய்விடுவார் பட்டா கிடைக்க லேட்டாகும் என்றும் அதனல் தான் கேட்ட பணம் ரூ.6,000/-ஐ சாயங்கலத்திற்குள் கொண்டு வரும்படி சொன்னார், அதற்கு நான் பணம் புரட்டி கொண்டிருக்கிறேன், வருகிறேன் என்றேன். ஆனால் என்னால் பணம் ஏற்பாடு செய்ய முடியாததால் அன்றைய தினம் சாயங்காலம் 6.00 மணியளவில் உசிலம்பட்டி தேனி ரோட்டில் உள்ள சர்வேயர் அலுவலகத்திற்கு போய் சர்வேயர் திருமதி.காஞ்சனா அவர்களை நேரில் பார்த்து 2013ம் ஆண்டில் எனது அப்பா பெயரில் பதிவு செய்த கிரைய பத்திரத்தின் நகலை அவரிடம் கொடுத்து பட்டா எப்போது கிடைக்கும் என கேட்டேன். அதற்கு சர்வேயர் காஞ்சனா, நான் கேட்ட பணம் ரூ.6000/- கொண்டு வந்திருக்கியா என்று கேட்டார். நான் அவரிடம் என்னால் அவ்வளவு பணம் ரெடி பண்ண முடியவில்லை, ஆட்டோ சரியாக ஓடவில்லை கொஞ்சம் குறைத்துக்கொள்ளுங்கள் என்று கெஞ்சிக் கேட்டேன். அதற்கு சர்வேயர் காஞ்சனா அவர்கள் சரி, ஆயிரம் ரூபாய் குறைத்துக் கொண்டு 5,000/-த்தை கொடு என்றார். அப்போது நான் அவரிடம் என்னால் அவ்வளவு பணம் புரட்ட முடியாது, பாட்டிக்கு உடல்நிலை சரியில்லாததால் பணம் செலவாகிவிட்டது, இன்னும் கொஞ்சம் குறையுங்கள் என்று கேட்டேன். அப்போது சர்வேயர் காஞ்சனா என்னிடம் ஏற்கனவே குறைத்து தான் சொல்லியுள்ளேயன் என்று கோபப்பட்டு சரி ரூ.4,000/-த்தை என்னுடைய அலுவலகத்திற்கு வந்து என்னை பார்த்து கொடுங்கள் உடனே பட்டா கிடைக்க ஏற்பாடு செய்கிறேன், இல்லையென்றால் நீ அலைந்துக்கொண்டு இருக்க வேண்டியதுதான் என்று கண்டிப்பாக சொல்லிவிட்டார். பணம் புரட்ட கஸ்டமாக இருந்தது, மேலும் எனக்கு லஞ்சமாக பணம் கொடுக்க விருப்பம் இல்லை. எனவே சர்வேயர் காஞ்சனா மீது நடவடிக்கை எடுக்க, என்னுடைய எழுத்து பூர்வமான புகார் மனுவும் மற்றும் அவர் கேட்ட லஞ்ச பணம் ரூ.4,000/-மும் கொண்டு வந்துள்ளேன். இத்துடன் சர்வேயரிடம் கொடுத்த எனது அப்பா பெயரில் 2013ம் ஆண்டு பதிவு செய்த கிரைய பத்திரத்தின் நகல் மற்றும் எனது பெயரில் 2021ம் ஆண்டு பதிவு செய்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் நகலை இணைத்துள்ளேன். எனவே எனக்கு பட்டா கிடைக்க ஏற்பாடு செய்ய என்னிடம் ரூ.4000/- லஞ்சம் கேட்கும் சர்வேயர் காஞ்சனா அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, தங்கள் உண்மையுள்ள, (sd/- XXXXX) M.Ranjithkumar 26/12/2021.

Sir, received the written complaint on 26.12.2021 at 16.15 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused were also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti Corruption, Chennai and registered a case in Madurai V&AC Cr. No. 18/2021 u/s 7 of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 on 26.12.2021 at 17.00 hrs., and took up investigation (s-d) P.M.Ramesh Prabhu 26.12.2021, Inspector / V&AC, Madurai.

Original FIR along with the original written complaint of Tr.M.Ranjithkumar, S/o. Mayandi, 1/138, South street, Poochipatti, Nakkalappatti Village, Usilampatti Taluk, Madurai District, photo copies of Sale deed in Doc No.3059/2013, dated 19.08.2013 and Thana Settlement deed in Doc No.4884/2021, dated 18.11.2021 are submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of cases under Prevention of Corruption Act, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.

(P.M.Ramesh Prabhu)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Madurai.
26.12.2021